# EASTERN UNIVERSITY, SRI LANKA

## Faculty of Commerce and Management

PART II EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION

## 2000/2001 (Repeat) – June/July 2007

## External Degree Examinations

## BBA 301 Managerial Accounting

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

---

**Q1.** (a) வரையறுத்த ABC கம்பனி பின்வரும் தகவல்களை வழங்கியது. 31 டிசெம்பர் 2006ல் முடிவடையும் மூன்று மாதங்களுக்கான காசுப் பாதீட்டினைத் தயாரிக்கவும்.

(i)

| மாதம் | விற்பனை | மூலப்பொருள் | கூலி | மேந்தலை |
|---|---|---|---|---|
| ஆவணி | 40,000 | 20,400 | 7,600 | 3,800 |
| புரட்டாதி | 42,000 | 20,000 | 7,600 | 4,200 |
| ஐப்பசி | 46,000 | 19,600 | 8,000 | 4.600 |
| கார்த்திகை | 50,000 | 20,000 | 8,400 | 4,800 |
| மார்கழி | 60,000 | 21,600 | 9,000 | 5,000 |
| | | | | |

கடன் நிபந்தனைகள்:

(ii) விற்பனை/கடன்பட்டோரில் 10% விற்பனைகள் காசு அடிப்படையிலும் 50% மான கடன்விற்பனைகள் அடுத்த மாதத்திலும் சேகரிக்கப்படுவதுடன் மீதி தொடர்ந்து வரும் மாதத்திலும் சேகரிக்கப்படும்.

கடன்கொடுத்தோர் - மூலப்பொருள் 2 மாதங்கள்

- கூலி 1/5 அடுத்து வரும் மாதங்கள்

- மேந்தலை 1/2 அடுத்து வரும் மாதங்கள்

(iii) ஐப்பசி 01, 2006 ல் காசு மீதி ரூ. 8,000 என எதிர்பார்க்கப்பட்டது.

(iv) ஆவணி, 2006ல் ரூ.1,00,000 பெறுமதியான இயந்திரம் ஒன்று பொருத்தப் மாதாந்த தவணைக்கட்டணமாக ரூ.5,000 ஐப்பசி மாதம் முதல் வழங்கப்படும்.

(v) முன்னுரிமைப்பங்கு ரூபா 300,000 வுக்கு பங்கிலாபமாக 10% 2006 டிசம்ப திகதியில் வழங்கப்படும்.

(vi) வாகன விற்பனைக்கான முற்பணம் ரூ.20,000 மார்கழியில் பெறப்படும்.

(vii) வருமானவரி (முற்பணம்) ரூ. 5,000. மார்கழியில் செலுத்தப்படும்;

(15 புள்

(b) சிறு குறிப்பு எழுதுக.
பூச்சியப் பாதீடு (Zero Based Budgeting).

(04 புள்

(c) காசுப்பாதீட்டினைத் தயாரிப்பதிலுள்ள அனுகூலங்கள் எவை?

(03 புள்

(22 புள்

**Q2.** (a) கம்பனி ஒன்று உற்பத்தி செய்கின்ற ஒரு தனிப்பொருள் உள்நாட்டுச் சந்ை ரூ.75வீதம் விற்கப்படுகிறது. தற்போதைய ஒரு மாதத்திற்கான உற்பத்தி மற்றும் விற் 40,000 அலகுகளாகும். இது அதன் இயலளவின் 50% ஆகும். இதன் கிரய விப பின்வருமாறு:

அலகொன்றுக்கான மாறும் செலவு ரூ. 50

மாதமொன்றிறிகான நிலையான செலவு ரூ. 10 இலட்சம்.

இலாபத்தினை அதிகரிப்பதற்காக முகாமையானது 03 திட்டங்களை த வைத்துள்ளது:

1. அலகொன்றுக்கான விலையினை ரூ.60 ஆகக்குறைத்து ஒரு மாதத்திற்கு 3 அலகுகளுக்கான ஏற்றுமதி வழங்கல் கட்டளையினை அனுமதித்தல். ஏ பொதியிடலுக்கான மேலதிகமான மாறும் செலவு ரூ.5 ஆகும்.

2. ஒரு அலகிற்கு ரூ.55 வீதம் 30 000 அலகுகள் உள்நாட்டு சந் கடைத்தொகுதிகட்கு விற்பனை செய்வதன் மூலம் உள்நாட்டுச் சந்தை விற்பன அதிகரித்தல். ஆதற்காக தற்போதைய விற்பனையினை அதன் தற்பே விலையிலேயே வைத்திருத்தல்;

3. கீழ் கண்டவாறு விற்பனைப் பிரிவால் ஆலோசிக்கப்பட்டதைப் போன்று அதிகரிக் உள்நாட்டு விற்பனைக்கான விற்பனை விலையினைக் குறைத்தல்.

| அலகொன்றுக்கு குறைக்கப்பட்ட விற்பனை விலை ரூ. | எதிர்பார்க்கப்பட்ட விற்பனை அதிகரிப்பு (அலகுகளில்) |
|---|---|
| 5 | 10,000 |
| 8 | 30,000 |
| 11 | 35,000 |

மேலே உள்ள திட்டங்களிலிருந்து உமது முடிவுகளை அட்டவணைப்படுத்துவதுடன் அத்திட்டங்கள் பற்றிய உமது விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் வழங்குக.

(14 புள்ளிகள்)

(b) பங்களிப்பையும் (Contribution) இலாபத்தையும் (Profit) வேறுபடுத்துக.

(03 புள்ளிகள்)

(c) கீழே உள்ள கைத்தொழில் துறைகளுக்கு கிரய முறைகள் கிரய அலகுகள், என்பனவற்றை தெளிவுபடுத்தக.

i.விளையாட்டுப்பொருள்(Toy making) ii. சீமெந்து உற்பத்தி (Cement) iii. கப்பல் கட்டுமானம்(Ship building)

(03 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

Q3. (a) ஒரு கம்பனி தனிப்பொருளொன்றினை உற்பத்தி செய்து ரூ.50/-க்கு விற்பனை செய்கின்றது. அலகொன்றிற்கான மாறும் செலவு ரூபா.35/- நிலையான செலவு ரூ.12 lakhs. இத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைக் கணிக்குமாறு வேண்டப்படுகின்றீர். ஒவ்வொன்றும் மற்றையதிருந்து தனித்தனியாகக் கருதப்பட வேண்டும்.

(i) P/V Ratio மற்றும் இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனை( Break-even sales.)

(ii) ரூ.3/- ஆக மாறும் செலவு அதிகரிக்கும் போது விற்பனை விலையில் அதிகரிப்பு ஏற்படாதவாறு புதிய இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனை.

(iii) ரூ. 2.4 இலட்சமாக இலாபத்தினை உயர்த்துவதற்கு விற்பனையில் அதிகரிப்பு தேவைப்படுகிறது.

(iv) விற்பனைத் தொகை அலகுகளில் அதிகரிப்பு குறைப்பு விகிதம்.

1. அலகொன்றிற்கான மாறும் செலவு ரூபா.3/-வால் அதிகரிப்பு

2. விற்பனை விலையில் தற்போதைய இலாபத்திற்கு பங்கம் ஏற்படாதவாறான 10% அதிகரிப்பு.

(v) தற்போதைய இலாபத்தில் பாதிப்பினை ஏற்படுத்தாது விற்பனையினை இலட்சமாக அதிகரிப்பதற்கு விளம்பரச் செலவினை அனுமதித்தல்.

(16 புள்

(b) இலாப நட்ட பகுப்பாய்வு அட்டவணையின் பிரதான வரையறைகள் 4 பற்றி விபரிக்கு

(04 புள்

(20 புள்

Q4. (a) Novell & Co. கம்பனியின் பங்குனி 2006 கிரய ஏடுகளில் இருந்து பின்வரும் த தரப்படுகின்றன.

| | ரூபா. |
|---|---|
| மூலப் பொருள் கொள்வனவு 20,000 அலகுகள் | 88,000 |
| மூலப் பொருள் நுகர்வு 19,000 | |
| உண்மைக்கூலி 4,950 மணித்தியாலயத்திற்கு செலுத்தியது. | 24,750 |
| உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் 1,800 | |

நியம விகிதங்களும் அலகுகளும் :

அலகொன்றுக்கான நேர் மூலப்பொருள் விகிதம் (Direct material rate) ரூபா. 4.00

ஒரு அலகுக்கான நியம உள்ளீடானது 10 அலகுகள். (Standard input).

மணித்தியாலத்திற்கான நேர் ஊழிய விகிதம் ரூபா.4

அலகொன்றுக்கான நியமத் தேவை (Standard requirement) 2.5மணித்தியாலங்கள்

பங்குனி 2006 க்கான அனைத்து மூலப்பொருள் ஊழிய விலகல்களை கணிக்குமா வேண்டப்படுகின்றீர்.(material and labour variances)

(12 புள்

(b) நியமக் கிரயத்திலிருந்து பாதீட்டுக் கட்டுப்பாட்டினை வேறுபடுத்துக.

(06 புள்

(18 புள்

Q5. (a) கம்பனியொன்றின் பின்வரும் ஐந்தொகை, மேலதிகத் தகவல்களில் பின்வருவனவற்றைக் கணிக்குமாறு நீர் வேண்டப்படுகின்றீர்:

(i) நடைமுறை விகிதம்(current ratio)
(ii) விரைவு விகிதம்(Quick ratio)
(iii) சரக்கிருப்பு புரள்வு(Inventory turnover)
(iv) சராசரி சேகரிப்புக் காலம் (Average collection period ) ஒரு வருடத்தில் நாட்கள் எனக் கருதுக.
(v) உரிமை மூலதனப் பொறுப்புக்கள் விகிதம்(Owned funds to liabilities ra

ஐந்தொகை

| மூலதனமும் பொறுப்புக்களும் | ரூபா. | சொத்துக்கள் | ரூபா. |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 2,00,000 | நன்மதிப்பு | 1,20,000 |
| ஏற்பாடும் மிகையும் | 58,000 | உபகரணங்களும் இயந்திரங்களும் | 1,50,000 |
| தொகுதிக்கடன். | 1,00,000 | | |
| கடன்கொடுத்தோர் | 40,000 | சரக்கிருப்பு | 80,000 |
| செலுத்த வேயண்டியவை | 20,000 | கடன்பட்டோர் | 45,000 |
| ஏனையநடைமுறைப்பொறுப்புக்கள் | 2,000 | காசு | 17,000 |
| | | ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 8,000 |
| | 4,20,000 | | 4,20,000 |

விற்பனை (வருடத்திற்கான கடன் விற்பனை) ரூபா.. 4, 00,000
மொத்த இலாபம் = ரூபா.. 1, 60,000

(20 புள்ளிகள்)